MUNICIPAL COUNCIL
JAFFNA

விலை ரூபா 1:25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஐப்பசி 11 ஸபர் 23 இதழ் 260

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28-10 1986

## ● பாப்பரசர் விடுத்த சமாதானதின அனுஷ்டிப்பை இலங்கை அரசபடைகள் மீறின

(நமது நிருபர்)

நேற்றைய தினத்தைச் சர்வ தேச சமாதான தினமாக அனுஷ்டிக்கவேண்டுமென பாப்பரசர் விடுத்த வேண்டு கோளுக்கிணங்கி நடப்பதாக அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் கிழக்கு மாகாணத்தில், மட்டக்களப்புப் மாவட்டத்தில் அரசபடையினர் இந்த வாக்குறுதியை மீறிச் செயற்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, வலையிறவுப் பாலத்தடியில் ரோந்துசேவையில் ஈடுபட்டிருந்த அதிரடிப் படையினர், நண்டுபிடிப்பதற்குக் கட்டப்பட்டிருந்த கூட்டைப் பார்த்துக்கொண்டிருந்த சிவநேசசூரியகுமார் (வயது 24) என்ற இளைஞர்மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டனர் இவ்விளைஞருக்குக் கையில் காயமேற்பட்டுள்ளது. எனினும் இவர் தப்பியோடிப் பின் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக் காய

(5ம் பக்கம் பார்க்க)

# ● தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் செயற்பட

# 1987 முதல் 'தமிழீழ செயலகம்'

## விடுதலைப் புலிகள் ஏற்பாடு

(நமது நிருபர்)

**"தமிழீழத்தில் சகல சிவில் நிர்வாக அமைப்புக்களையும் நிர்வகிக்க 'தமிழீழ செயலகம்' (கச்சேரி) 1987-ல் இயங்க ஆரம்பிக்கும்" இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

அந்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு;

"தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவ ரீதியான தயாரிப்பு வேலைகள் முற்றுப்பெற்று வருகின்றன. எமது போராட்டத்தின் படிப்படியான படிமுறை வளர்ச்சிகள்-வெற்றிகள் இராணுவத்தை முகாமிற்குள் முடங்கவைத்திருக்கிறது. இன்று இராணுவம் எம்மால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதே நிலையில் இராணுவம் விரட்டியடிக்கப்பட்டுத் தமிழீழம் நிர்மாணம்பெறும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

இந்த வகையில் தமிழீழப் பிராந்தியங்களில் சிவில் நிர்வாக அமைப்பு எம்மால் கட்டி எழுப்பப்பட்டு வருகிறது. முற்றமுழுதான சகல சிவில் நிர்வாக அமைப்புகளையும் உள்ளடக்கிய தமிழீழ அரசு 1987ல் தமிழீழப் பிராந்தியங்களை நிர்வகிக்கும்.

தமிழீழ தேசமக்களைப் பாதுகாத்துத் தமிழீழ மண்ணை விடு

(8ம் பக்கம் பார்க்க)

## வியாபார, தொழில் ஸ்தாபனத்துக்கு 1987 முதல் புலிகளின் அனுமதிப்பத்திரம் வேண்டும்

யாழ்ப்பாணம், செவ்

வியாபார தொழில்ஸ்தாபனங்கள் அனைத்தும் 1987 முதல் தமிழீழவிடுதலைப்புலிகளின் அனுமதிப்பத்திரம் பெற்றே இயங்க வேண்டும் என்று அவ்வியக்கம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமான அறிக்கை ஒன்றை விடுதலைப்புலிகள் இயக்கம் நேற்று வெளியிட்டுள்ளது.

தமிழீழ உருவாக்கத்தில் ஓர் அம்சமாக சகல உற்பத்திப்பொருள்களின் அளவு தரம் என்பனவற்றோடு மக்களுக்குத் தேவையான பொருள்களின் கொள்வனவு விற்பனவு ஆகியவற்றின் அளவை அறியவும் ஒரு சில வியாபார ஸ்தாபனத்தில்

(8ம் பக்கம் பார்க்க)

## இன்றுமுதல் பொதுமக்கள் பாவிக்கவேண்டிய வீதிகள்பற்றி புலிகள் கண்டிப்பான அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், செவ்

யாழ். கோட்டை இராணுவ முகாமுக்கு தமது அலுவல்கள் காரணமாகச் செல்பவர்கள் யாழ் பிரதான வீதிவழியாகவும், பலாலி இராணுவ முகாமுக்கு தமது அலுவல்காரணமாகச் செல்பவர்கள் அச்சுவேலி வசாவிளான்வீதிவழியாகவும் மட்டுமே இன்று தொடக்கம் போக்குவரத்து செய்ய வேண்டுமென்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்வேண்டு

(5ம் பக்கம் பார்க்க)

## ஜி.சி.ஈ. முடிவு இன்று

கொழும்பு, செவ்

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி சி ஈ (உயர் தர) பரீட்சையின் முடிவுகள் இன்று வெளியிடப்படவுள்ளது. (வா)

## இலங்கைக்கு இஸ்ரேலிலிருந்து எட்டு அதிசக்தி வாய்ந்த போர்ப்படகுகள்

கொழும்பு, திங்கள்

"சுப்பர் டுவாரா" என அழைக்கப்படும் அதிசக்தி வாய்ந்த எட்டுயுத்தப்படகுகளை இஸ்ரேல் இலங்கைக்கு வழங்கவுள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேபோன்ற 6 படகுகள் தற்போது இலங்கையில் சேவையிலீடுபட்டிருப்பதாகவும் ஆனால் வழங்கப்படவுள்ள எட்டுப்படகுகளும் அவற்றிலும்பார்க்க அதிசக்திவாய்ந்தவையெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

(5-ம் பக்கம் பார்க்க)

## ஈ.பி. ஆர். எல். எவ் இயக்கத்தால் கைதான தபாலதிபர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், செவ்

ஈழம் தபால்சேவையை அரசுக்குக் காட்டிக் கொடுக்கும் செயலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த வாரம் ஈ பி ஆர் எல் எவ் இயக்கத்தால் கைது செய்யப்பட்ட தபால் உயரதிகாரி நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த விடுதலை சம்பந்தமாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-

ஈழம் தபால்தலை ஒட்டப்பட்ட நூற்றுக்கணக்கான கடிதங்களை கொழும்புக்கு அனுப்பிய தபாலதிபர் எமது கண்காணிப்புப் பிரிவினரால்

(5ம் பக்கம் பார்க்க)

## யோசனைகள் போராளிகளிடம் கையளிப்பு

சென்னை, ஒக் 27

இலங்கையின் இனப்பிரச்னைக்கு தீர்வு காணுமுகமாக இலங்கை அரசினால் இறுதியாக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் அவற்றுக்கான விளக்கங்கள் ஆகியவை அடங்கிய நகல் பிரதிகள் தமிழ்ப் போராளிகளுக்கு வழங்கப்பட்டு விட்டதாகத்தெரியவருகிறது. (ஊ)

## வடமாகாணத்திற்கு ஏஜண்டுகள் தேவை

ஹேலீஸ் லிமிட்டட்டின் பிலிப்ஸ் மின்சார உபகரணங்களை (ரேடியோ, டி வி, குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் வீட்டுப் பாவனைக்கான மின்சாரப் பொருட்கள், பல்புகள்) வடமாகாணத்தில் விநியோகம் செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை. எம்மால் தெரிவு செய்யப்படும் ஏஜண்டுகள் வங்கி மூலம் 500,000 ரூபாவிற்குக் குறையாத வங்கி உறுதிப் பத்திரத்தை (Bank Guarantee) சமர்ப்பிப்பதன்மூலம் பொருட்களைக் கொள்வனவு செய்யமுடியும் அல்லது பணத்தைச் செலுத்தியே பொருட்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணப்பப் பத்திரங்கள் தகைமை அடிப்படையிலே பரிசிலனை செய்யப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி: 15-11-86 முழு விபரங்களுடன் பின்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்,

Manager,
Consumer Electronic Dept.
HAYLEYS LIMITED,
25, Foster Lane, Colombo-10.

[C-3016]

## வடக்கு, கிழக்கில் சேவையாற்ற பிரான்ஸிலிருந்து சமாதான டாக்டர்கள்குழு வரவுள்ளது

கொழும்பு, திங்கள்

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் சேவையாற்றுவதற்கென பிரான்ஸிலிருந்து சமாதான வைத்திய குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

வடக்குக் - கிழக்கு மாகா

[8ம் பக்கம் பார்க்க]

## நவ 27க்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தாக்குதல் தொடர்பாக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கெடுக்கப்பட்ட வண பிதா சிங்கராயருக்கெதிரான வழக்கு மீண்டும் நவம்பர் 27ம திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. [ஈக]

## மன்னாரில் கைதான படையினரை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது

### – அமைச்சர் லலித்

கொழும்பு, திங்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு படையினரின் விடுதலை சம்பந்தமாக விரைவானதொரு தீர்வு ஏற்பட அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினிக் கூட்டுத்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ்த்தட்டச்சு இயந்திரம் (Olymbia Standard மற்றும் English, Standard portable Typewriters விற்பனைக்குண்டு Fudo Enterprises, Jaffna Road Manipay, (Near Bank of Ceylon - Bitsman) C 5445

வட இந்தியா முறைப்படி தயாரிக்கப்பட்ட ''மாங்காய் ஊறுகாய்'', ''வெள்ளைப்பூடு அச்சார்'', ''தேசிக்காய் ஊறுகாய்'' மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு M G M ,777,K.K.S. Road and 208, 1st Cross St. Jaffna. Telephone:22611. (C 5069)

தீபாவளி மலிவு விற்பனை. புதிய, நவீனமான உருக்குத் தளபாடங்கள் பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T V.Stands, Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான தளபாடங்கள் விலை குறைப்பு தீபாவளிவரை மட்டுமே. கவிதாஸ்-டைனமிக்கா காட்சியறை. இல: 22, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24149. [C 1491]

மைசூர் அரிசி நம்பர் 1. கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

### முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை

### அறிவித்தல்

மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற விசுவலிங்கம் நமசிவாயா என்பவரின் மரணசாதன மரணச்சொத்து விடயத்தில்,

- மரணமெய்தியவரி

வழ. இல: மரணசாதன) 260.

நியாயாதிக்கம்)

விசுவலிங்கம் குகதாசன் லிங்கஸ்தான் மல்லாகம்.

- மனுதார்.

மேற்குறித்த காலஞ்சென்றவரின் மரணசாதனத்தை நிருபிப்பதற்கு ஆக மேற்படி வழக்கு இந் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளது என்றும் அதற்கு இணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை 1985ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12ம் திகதி இந் நீதிமன்றில் பதியப்பட்டுள்ளது என்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1986ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23ம் திகதி.

நீதிமன்ற கட்டளைப்படி
ஆழ்வார்
சிவபாதசுந்தரம்
பதிவாளர்
மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்
பதிவாளர்,
மாவட்ட/மாஜிஸ்ட்ரேட்
நீதிமன்றம்
மல்லாகம்

வரைவு:
கு. விசுவலிங்கம்
மனுதாரின் சட்டத்தரணி.
C 5414

## விற்பனைக்கு

EN Ford Consul கார் நல்ல நிலையில் முற்றாக புதுப்பிக்கப்பட்டது. ஸ்ரீநிவாசன், மருதனைமடம். [C 5387]

## சேவை

தீபாவளி, நத்தார், புதுவருடம் இத்திருநாட்களை முன்னிட்டு யாழ் பஸ் நிலைய மணிக்குரல் விளம்பரசேவையில் குறைந்த கட்டணத்தில் விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்த விஷேட சேவையில் விளம்பரம் செய்வோருக்கு நாம் புதிய மக்ஷல் கசற்றில் உங்கள் விளம்பரத்தை ஆண், பெண் இரு குரல்களில் பதிவு செய்து இலவசமாக வழங்குவோம். அத்துடன் 30, 31ம் திகதிகளில் தீபாவளி வாழ்த்து நிகழ்ச்சியும். இடம்பெறும். தொடர்பு கொள்ளுங்கள்:- மேஜர் ஷண், மணிக்குரல் விளம்பரசேவை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C5427)

## தேவை

கிளிநொச்சியிலுள்ள கருணை நிலையத்துக்கு பெண் அதிபர் தேவை. மிஷனரிநாட்டமுள்ள குடும்பப் பொறுப்பற்றவரும் அனாதை இல்லம், மனையியல், தையல் பயிற்சி நிலையங்களை பொறுப்புடன் நிர்வகிக்கும் திறமையும் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்புசெய்யும் ஆற்றலும் அவசியம். இளைப்பாறிய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். நவம்பர் 10ம் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். ஆர்ச்டீக்கன், சென்யேம்ஸ் தேவாலயம், நல்லூர், யாழ்ப்பாணம். [C 5366]

## வகுப்புகள்

Radio and T V. Electronic Engineering. வெல்டிங், வயறிங் மோட்டார் மெக்கானிசம், மோட்டார், வைன்டிங் தட்டெழுத்து - சுருக்கெழுத்து 2-11-86ல் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. தொடர்பு: Vispa Engineering Aid Hall, 328. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 5434

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பிரயாண ஒழுங்குகள்

| | |
|---|---|
| சவுதி | உணவு விடுதி உதவியாளர்கள் |
| ஓமான் | பொது வேலையாட்களும், கிளினேசும் |
| குவைத் | ஆஸ்பத்திரி கிளினேஸ் |
| அபுதாபி | கட்டிட பராமரிப்புத் துறையினர், அரச தோட்டப் பராமரிப்பினர் |

உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**R. K. பரமசுவாமி,**
ஆஸ்பத்திரி லேன்,
இணுவில் மேற்கு.

[C-5433]

## தீபாவளி பண்டிகைகால மாபெரும் மலிவு விற்பனை

★ பட்டுச் சாறிவகைகள் ★ பனாரிஸ்
★ மணிப்புரி ★ தஞ்சூர் ★ காஞ்சிபுரம்
★ ஆரணியம் ★ சிபோன் மணிப்புரி
★ சிபோன் கஸ்மீர் ★ ஒக்கன்சா
★ பட்டு வேட்டி சால்வைகள்

இன்னும் ஜப்பான் சாறி வகைகள்

★ விக்ரம் ★ மங்கள சுதா
★ பத்மினி கோலாப்பூர் ★ லவ் மறீச்
★ ஈஸ்வரிக் குயின் ★ ஓபல் குயின்
★ வஜிராக் குயின் ★ கொம்பியூற்றர்
★ சிந்து பைரவி

இன்னும் பலரக சாறி வகைகளையும் அனைத்து மில் சேட்டிங் சூட்டிங் றெடிமெட் ஆடைகளும் தெரிவுசெய்ய இன்றே விஜயம் செய்யுங்கள்:

### சீமாட்டி

122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24413
24096

கிளை: சீமாட்டி,
8, நவீன சந்தை,
சுன்னுகம்.

[C-5437]

உ
விராட் விஸ்வப் பிரம்மனே நம!

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் அக்ஷய வருடம் ஐப்பசித்திங்கள் 12-ம் நாள் 29-10-86 புதன்கிழமை முற்பகல் 10-00 மணிமுதல் 11-15மணி வரையுள்ள தனுலக்கின சுபமுகூர்த்தத்தில்:

| எமது புத்திரன் | எமது புத்திரி |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **கந்தராசா** | **லதா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

விநாயகப் பெருமான் திருவருளினால் மணமகள் இல்லத்தில், திருமணஞ்செய்யப் பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி
தம்பையா மகேஸ்வரியும்
தம்பையா நகுலேஸ்வரனும்
(கண்ணன்)
பொற்றொழில ளர் வீதி,
சாவகச்சேரி.

செ. ஆறுமுகசாமியும்
குடும்பத்தினரும்,
கரம்பைக்குறிச்சி,
வரணி.

(இரு வீட்டார் அழைப்பு) [C-5425]

## விக்னு

டியூசன் சென்ரர்,
52, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம்வாய்ந்த ஒரே நிறுவனம்.]

(மீட்டல் வகுப்புக்கள்)

A/L 87 **DAY CLASSES**

**ஆரம்பம்: 03-11-86 காலை 8 மணி**

**Sat., Sun. CLASSES**

**ஆரம்பம்: 9-11-86 பகல் 12 மணி**

முற்குறிப்பு:-

★ யாழ். நகரில் கலை, வர்த்தக வகுப்புக்களுக்கு தனித்துவம் பெற்ற ஆசிரியர் குழு ஒன்றிணைந்து நடாத்தும் ஒரே நிறுவனம் இதுவாகும்.

★ கலை, வர்த்தக வகுப்புக்கள் இந்நிறுவனத்தில் மட்டுமே சிறப்பாக நடைபெறுகின்றது.

[A-2826]

## குளிர்சாதனப் பெட்டிகள் (REFRIGERATORS)

பாவனையாளர்களுக்கு

### ஓர் நற்செய்தி!

★ எல்லாவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும், டீப்பிறீசர்களும் எமது அனுபவமிக்க தொழில் நுட்பவல்லுநர்களால் உங்கள இல்லத்தில்வைத்து பிழைகளை முன்னிலும் பார்க்க குறைந்த செலவுடன் திருத்திக் கொடுக்கப்படும்.

★ விரும்பிய வசீகரமான வர்ணங்களில் எமதுவேலைத்தளத்தில் வைத்து பெயின்ற் அடித்துக் கொடுக்கப்படும்.

எம்மோடு தொடர்புகொண்டு இவ்வரிய சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

**சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்றெற்,**
484, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 22134 — 23819

(A-3010)

பஞ்சாப் மாநிலத்திற்கு—

# 5,000 இராணுவத்தினரை அனுப்புமாறு

# ராஜீவிடம் பர்னலா வேண்டுகோள்

சண்டிகார், அக்டோபர் 27

**பஞ்சாப் மாநிலத்தில் நிலைமை மோசமடைந்துவருவதால் இம் மாநிலத்திற்கு ஐயாயிரம் பரா இராணுவத்தினரை அனுப்பிவைக்குமாறு முதல்வர் திரு. சுர்ஜித்சிங் பர்னலா இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைக் கேட்டுள்ளார்.**

பஞ்சாப்பிலுள்ள கிராமமொன்றில் கடந்த சனிக்கிழமை சீக்கிய தீவிரவாதிகளால் எட்டுப் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே திரு, பர்னலா 5000 இராணுவத்தினரை இம் மாநிலத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

சீக்கிய தீவிரவாதிகளால் எட்டுப் பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு ஆட்சேபனை தெரிவித்து இன்று பொதுவேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளுமாறு இந்து தீவிரவாதிகள் பஞ்சாப் மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர். [ஒ]

உலகச் செய்திகள்

பாதிக்கப்பட்ட கிராமத்திற்கு விஜயம்செய்த திரு பர்னலா 5000 பரா இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கை மூலம் பஞ்சாப் மாநிலத்தில் மூன்றில் இரண்டு பகுதி தீவிர கண்காணிப்பிற்குட்படும் என்று கூறினர்.

## பி.எல். ஓவும், ஷியா படையும் யுத்தநிறுத்த உடன்பாடு

பெய்ரூட், அக்டோபர் 27

லெபனனில் கடந்த ஒரு வாரகாலமாக சண்டையிட்டுக்கொண்டிருக்கும் ஷியா மக்கள் படையும் பலஸ்தீனிய விடுதலை இயக்கமும் யுத்த நிறுத்தமொன்றிற்கு உடன்பட்டுள்ளன.

சிரியா நாட்டு கண்காணிப்பாளர் ஒருவர் இருதரப்பினருக்குமிடையே சமரசம் செய்துவைத்து இந்த யுத்த நிறுத்தத்தினை ஏற்படுத்தியுள்ளார். [ஒ]

## பட்டிமன்றம்

நெல்லியடி திங்

மனிதகுல வளர்ச்சிக்கு உதவியது இராமாயணமா? மகாபாரதமா? என்ற தலைப்பில் அடுத்தமாதம் 12ம் தேதி கரவெட்டி திரு இருதயக்கல்லூரி மண்டபத்தில் ஒரு பட்டிமன்றம் நடைபெறவுள்ளது.

இப்பட்டி மன்றத்தில் அதிபர்கள் ஆசிரியர்கள் மட்டுமே பங்கெடுக்கவுள்ளனர்,

சட்டத்தரணி திரு. வி. மகாலிங்கம் தலைமை தாங்குவார்.

மொசாம்பிக்———

## அதிபரின் மரணத்திற்கு தென்னாபிரிக்காவே பொறுப்பு

ஹராரே, அக்டாபேர் 27

மொசாம்பிக் அதிபர் சமரோ மஷேலின் மரணத்திற்கு காரணமாயிருந்த விமான விபத்திற்கு தென்னாபிரிக்காதான் பொறுப்பு என்று சிம்பாப்வே ஜனாதிபதி திரு ரொபர்ட் மொகபே குற்றம்சாட்டியுள்ளார்

ஹராரேயில் நடைபெற்ற பேரணியொன்றில் உரையாற்றுகையில் திரு. மொகபே இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் பிரிட்டோரியா ஆதரவிலான வலதுசாரி கிளர்ச்சிக்காரரை எதிர்த்துப் போராடி தோற்கடிக்கச் செய்வதற்கு தம்முடைய நாடு மொசாம்பிக் நாட்டிற்கு எல்லா உதவிகளையும் வழங்கும் என்றும் தெரிவித்தார், [ஒ]

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம் செவ்.

குப்பிளான் சற்கரை கற்பக விநாகர் ஆலயத்தில் பத்து நாட்களாக இலட்சார்ச்சனை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கணபதி ஓமம் இம்மாதம் 29 ஆம் திகதி புதன் கிழமை காலை 6 மணிதொடக்கம் நண்பகல் வரை நடைபெறும்.

மேற்படி ஆலயபரிபாலன சபையின் சார்பில் அதன் தலைவர் இதற்கான பணிகளை மேற்கொண்டுவருகிறார்.

மாணவியிடமிருந்து —

## பெறுமதி வாய்ந்த பை சாமர்த்தியமாக அபேஸ்

யாழ்ப்பாணம், செவ்.

பாடசாலை மாணவி ஒருவரின் பெறுமதிவாய்ந்தபொருள்கள் அடங்கிய பை ஒன்று மினிபஸ்ஸில் வைத்து இனந்தெரியாத ஒருவரால் சாமர்த்தியமாக அபகரிக்கப்பட்டது

யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்ற சங்கீத, நடன போட்டியில் கலந்து கொள்ள காரைநகர் ஆயிலி பாடசாலையிலிருந்து சென்ற சிவரஞ்சி வேலாயுதபிள்ளை என்னும் மாணவி ஒருவரின் சுமார் 1000 ரூபா பெறுமதியான ஆபரண அலங்கார உடைகள் அடங்கிய பையே அபகரிக்கப்பட்டதாகும்.

கடந்த வாரம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

குறித்த அந்த மினிபஸ் சுழிபுரம் பகுதியை அண்மித்த போது பஸ்ஸின் பின்புறமிருந்த ஆசிரியை இடையில் இருந்த ஒருவர் மூலம் முன்புறமிருந்த மாணவியிடமிருந்து தனது குடையை பெற்றுக் கொண்டார் இதன்பின் அந்த நபர் பஸ் ஒட்டுமடத்தை அண்மிக்குமுன் மீண்டும் மாணவியிடம் ஆசிரியை பையை தரும்படி கேட்டார் எனக் கூறி பையை பெற்றுக்கொண்டார்

ஓட்டுமடத்தில் ஆசிரியையும மாணவிகளும் இறங்கியதும் அந்த பையை தரும்படி ஆசிரியை மாணவியிடம் கேட்டபோது ''நீங்கள் 'கேட்டதாக கூறி குடை வாங்கிய அந்த நபர் அப்போதே பையை வேண்டினர்' என மாணவிகூறினர்.

திகைப்படைந்த ஆசிரியை அடுத்த பஸ்ஸில் யாழ்ப்பாணம் சென்று மினிபஸ்காரரை விசாரித்தபோதும் எதுவித பலனுமின்றி ஏமாற்றமடைந்தார். (சி)

## ஏகதின இலட்சார்ச்சனை

பண்டத்தரிப்பு, திங்

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் ஏகதினலட்ச்சார்ச்சனை எதிர்வரும் 29-ம் திகதிபுதன்கிழமையன்று நடைபெறவுள்ளது.

## ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தி விழா

யாழ்ப்பாணம், செவ்

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் உலகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்யவில்லை. ஆனால் அவரின் சக்தியும் பெருமையும் உலகமெங்கும் பரவியுள்ளது,

இவ்வாறு ஆத்மஜோதி ஆசிரியர் திரு, நா. முத்தையா ஸ்ரீ ராம கிருஷ்ண ஜெயந்தி விழாவில் உரையாற்றுகையில கூறினர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றவர்களான கீழ்ப்பிரிவு ஜெயந்தன், பு. அபிராமி மத்திய பிரிவு து செந்தூரன், ந சுஜீதா மேற்பிரிவு: பா கேதீஸவரரூன் த. தேன்மொழி அதிமேற்பிரிவு! க இந்திரானந்தம் ந. தமிழரசி ஆகியோருக்கான பரிசில்களை இவ் விழாவில் யாழ் அரச அதிபர் திரு மு. பஞ்சலிங்கம் வழங்கினர்.

## பிரிட்டிஷ்கன்சர்வேட்டிவ்கட்சி துணைத்தலைவர் ராஜினமா!

லண்டன், அக்டோபர் 27

பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சியின் துணைத்தலைவர் திரு, ஜிப்பி ஆர்ஷர் ஒரு பெண்மணியுடன் தொடர்புகொண்டிருந்ததாகக் கூறப்பட்டு வந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து தமது பதவியை ராஜினமா செய்துள்ளார்.

ஒரு நாவலாசிரியரான திரு. ஜிரி ஆர்ஷகர் கன்சர்வேட்டிவ் கட்சியின் மதிப்பை உயர்த்துவதற்காக திருமதி தாட்சரால் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டமைகுறிப்பிடத்தக்கது. (ஒ)

கிராம நீதிமன்றில்----

## மதுபோதையில் வருவது புகைபிடிப்பது தடை

பண்டத்தரிப்பு திங்கள்

பண்டத்தரிப்பு கிராம சேவை அலுவலர் பிரிவில் தமிழீழ கிராம நீதிமன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு குறுகிய காலத்தில் இப்பகுதி பொதுமக்களிடம் இருந்து 41 முறைப்பாடுகள் விசாரணைக்காக கிடைத்துள்ளதாக அறியப்படுகிறது,

இதுவரை 14 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு ஆறு முறைப்பாடுகள் சமாதானமான முறையில் தீர்க்கப்பட்டுள்ளதாக மன்றின் தலைவர் திரு எஸ். ஏ செபரத்தினம் இதுபற்றித் தகவல் தருகையில் தெரிவித்தார்

இதேவேளை விசாரணைக்கு சமூகமளிப்பவர்கள் மது அருந்திய நிலையில் வருவது, புகை பிடிப்பது ஆகியன தடை செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஆங்கில தினவிழா

வவனியா, திங்கள்

ஆங்கிலம் இன்று உலக மொழியாக கருதப்படுகின்றது ஆதலால் உலகில் பெரும்பாலான பகுதிகளில் உள்ள மக்களோடு இலகுவில் தொடர்பு கொள்ளக்கூடிய வாய்ப்புகள் இதனால் ஏற்படுகின்றது.''

வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெற்ற வவனியா மாவட்ட ஆங்கில தினவிழாவில் பேசுகையில் மேற்கண்டவாறு வவனியா பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு வெ. சபாநாயகம் தெரிவித்தார்.

கல்விப்பணிப்பாளர் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

வவனியா மாவட்ட ஆங்கில வட்டார கல்வி அதிகாரி திருமதி ரி. ஜெயபாலசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினர். இப்போட்டி தொடர்பான ஏற்பாடுகளை வவனிய மாவட்ட ஆங்கிலசங்க செயலாளர் திரு. கே சிவஞானம் மேற்கொண்டிருந்தார். [எ]

## உண்டியலை உடைத்து திருட்டு

உடுவில், திங்கள்.

கந்தரோடை வத்தாக்கை விசாலாட்சி அம்மன் ஆலயம் உண்டியல் உடைக்கப்பட்டு திருடப்பட்டது.

அண்மையில் இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக கூறப்படுவதாவது!

மேற்படி அம்மன் கோவிலில் திருடும் நோக்குடன் ஓடுகளை பிரித்து உள்ளிறங்கிய திருடர்கள் அங்கிருந்த முருகன் சிலையை ஆயுதங்கொண்டு பிரட்டியுள்ளனர்.

முருகன் சிலையின் அடியில் பித்தளையிலான தகடுமட்டுமே இருந்ததால் ஏமாற்றமடைந்தவர்கள் அம்மன் கோவில் கதவை உடைக்க முயன்றுள்ளனர்.

அவர்களின் இம்முயற்சி கைகூடாமல் போகவே அங்கிருந்த உண்டியலை உடைத்து அதிலிருந்த சில்லறைகளை எடுத்துக் கொண்டு கோவில் வாசலை திறந்து வெளியேறி சென்றனர் என்று கூறப்படுகிறது. [எ]

திறமையான அசொக் லேலண்ட்
உதிரிப்பாகங்கள் உபயோகிப்பதினுல்
உங்கள் லங்கா அசோக்லேலண்ட்
வாகனம் மிக நன்ருக ஓடுகின்றது.

விலை ரூ. 25/- முதல்
லங்கா அசோக் லேலண்ட சர்விசஸ் (பிரைவேட்) லிமிடட்
60, பார்க் வீதி, கொழும்பு 2. தொலைபேசி: 541003
தொழிற்சாலை: பனகொடை, ஹோமாகம. தொலைபேசி: 550592

## மணிவாக்கு

பணத்தை மட்டும் தரும் தொழில்களைச் செய்தால், நாம் உண்மையில் சோம்பேறிகளாவோம்; அல்லது அதனிலும் தாழ்ந்த நிலையில் இருப்போம் என்பதை மறக்கலாகாது.
—தோரோ

## நமது நோக்கு

### அனைத்துலகுக்குமோர் துக்கதினம்

மொஸாம்பிக் ஜனாதிபதி சமோரா மாஷேலுக்கு சுதந்திரத்தில் தாகம் கொண்ட உலகம் இன்று இறுதி மரியாதை செலுத்துகிறது.

நாட்டுக்குழைத்து அதன் தலைமைப்பீடத்தை வகித்து வந்த பல உலக தலைவர்கள் எதிர்பாராத வண்ணம் மரணமடைந்திருக்கின்றனர்.

சதியாலும். சதியுடன் இணைந்த விபத்தாலும் கொல்லப்பட்ட தலைவர்கள் தத்தம் சுதந்திரவீரச்செயல்கள் தொடர்ந்து நடக்கும் என்ற நம்பிக்கை கொண்டவர்களே;

உலகின் பெருந்தலைவர்களில் ஒருவராக மதிக்கப்பட்ட அன்னை இந்திரா காந்தி சதிமரணத்தைஎதிர்பார்த்தவர்; தம்முடைய இரத்தம் இந்திய சுதந்திரத்துக்கு பலமளிக்கும் பசளையென்று சாவுக்கு சற்றே முன்னராகக்கூறியிருந்தார்;

சுவிடிஷ் ஜனாதிபதி ஒலெவ் பால்மே அப்பழுக்கற்ற தேசியவீரன். உலக சமாதானத்துக்கு முட்டுக்கட்டைபோடும் இரு வல்லரசுகளையும் இரக்கமின்றித் தாக்கிவந்தார். சோஷலிசவாதியென்று கொண்டபோதும், அமெரிக்காவின் எதிரியென்று கொள்வதற்கில்லை. அவருடைய கொலை இன்னும் மர்மமாகவே இருக்கின்றது.

உலகின் அஞ்சலிக்கு இன்று உரித்தான மொஸாம்பிக் ஜனாதிபதி, ஆபிரிக்க தேசியத்தின் கதாநாயகரெனக் குறிப்பிடலாம்.

ஆபிரிக்க போரின் அவலத்தை நீக்கி சமாதானத்திற்கு வழிகோலவேண்டும் என்ற ஐ நா. வின் கோரிக்கையை ஏற்று அங்குசென்ற ஐ நா. வினது இரண்டாவது பொதுச் செயலாளர் டாக் ஹமர்ஷீல்ட் [Dag Hammarskjold] கொங்கோ மாநிலத்தில் ஏற்பட்ட விமான விபத்தில் உயிரிழந்தார். அது அனைத்துலகையும் பாதித்த விபத்து.

ஐ நா.வில் ஒப்புயர்வற்ற செயலாளர் பிரம்மச்சாரியம் பூண்ட இப்பெருந்தகைக்கு எதிரிகளின் சதியே விபத்தைவிளைவித்ததென்ற சந்தேகம் இன்றும் தெளிவாகவில்லை. இவருடைய அகாலமரணம் உலகுக்குண்டான நட்டம் மதிப்பிடக்கூடியதல்ல.

இன்னொரு வகையில் ஜனாதிபதி மாஷேலின் மரணம்அமெரிக்கஜனாதிபதி லிங்கனை நினைவூட்டுகிறது. மரக்கொட்டிலிலிருந்து வெள்ளைமாளிகை உள்ளிட்ட லிங்கனைப்போல ஒரு வறுமையான குடும்பத்தில் பிறந்த மாஷேல் தமது நாட்டின் ஜனாதிபதியானார். அகாலமரணத்துக்கு ஆளானார்.

வெள்ளை மாளிகையின் அலங்காரவசதிகள் அவருக்கு கிட்டாதபோதும், நாட்டின் சுதந்திரத்தை ஸ்திரப்படுத்த தென்னாபிரிக்க வெள்ளையர் ஆட்சியுடன் ஒப்பந்தம் செய்தார். ஆனால் நாட்டின் பூரண சுதந்திரத்திற்கு போராட என்றும் தயாரான கெரிலா வீரர். சோஷலிச ஆட்சியே இலட்சியமாகக்கொண்டபோதும் நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாத நிதிஉதவியை அமெரிக்காவிடம் பெறத் தயங்கவில்லை.

பதினொரு வருட சுதந்திரத்திற்குப் பின்னும் நாடு சமாதானமும் சுபிட்சமும் காணாத நிலையில் இவ்விரு முனைகளில், சுயசிந்தனையுடன் செயலாற்றிய திறமை உலகனைத்தையும் கவர்ந்திருக்கிறது.

தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல், அரசுடன், சமாதான ஒப்பந்தம் செய்த போதும் அந்த இனவெறி அரசு மொஸாம்பிக்குக்கெதிராகப் போராடும் படையினருக்கு உதவுவதை அறிந்திருந்தார்.

எவ்வகையிலும் மொசாம்பிக்கின் உள்ளூர் போருக்கு எண்ணெய்விட வேண்டுமென்ற தென்னாபிரிக்க அரசின் சதிக்கு ஜனாதிபதி பலியானரென்ற நம்பிக்கை வலுவடைந்துவருகிறது.

அதற்குரிய மேல்மட்ட விசாரணையின் தீர்ப்பு என்னவானாலும் ஏமைமகன் மாஷேல் தமது வீரமரணத்தால் அழியாப்புகழுடையவரென்பதை நாட்டு மக்கள் வடிக்கும் கண்ணீரும் அனைத்துலகும் கொண்டாடும் துக்கமும் நிரூபிக்கின்றன.

ஆபிரிக்க தேசிய முன்னணி நாடுகள் மறைந்த தலைவரின் குறிக்கோளை நிலைப்படுத்த முன்வந்துள்ளன. அவருடைய இப்பெருநோக்கம் நிறைவேற்றப்படுமென்ற நம்பிக்கை விபத்தும் சதியும் உலக வரலாற்றை திசைதிருப்ப உதவாவென்பதைக் கற்பிக்கின்றது.

## மரமுந்திரிகை விதை விநியோகம்

மண்டைதீவு, திங்கள்,

யாழ். மாவட்டத்தில் இம்முறை மரமுந்திரிகை செய்கையை பரவலாக்கும் திட்டத்துக்கு உதவும் வகையில் 26 ஆயிரம் மரமுந்திரிகை விதைகளை பனை அபிவிருத்திச் சபை விநியோகம் செய்துள்ளது.

இச்சபைக்கு சொந்தமான மாமுனை பனம்தோப்பில் ஊடுபயிராக உற்பத்தி செய்யப்பட்ட 24 மரங்களிலிருந்து பெறப்பட்ட விதைகளே இச்சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

1987ம் வருடத்தை, யாழ். கல்வி மாவட்டம்——

# தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டாகக்கொண்டு செயல்படும்

யாழ்ப்பாணம், செவ்.

''1987ம் ஆண்டை யாழ்ப்பாணக்கல்வி மாவட்டம் தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தி ஆண்டாகக் கொண்டு முழுமையாகச் செயற்படவுள்ளது. இதனால் உடைநலுங்கா உத்தியோகங்களுக்குக் கொடுத்துவந்த முக்கியத்துவம்போல் உடற்தொழிலால் ஈடுபடும் தொழில்களுக்கும் முக்கியத்துவம் உண்டு என்பதை எல்லோர் மத்தியிலும் பிரசாரம் செய்ய வேண்டும்''

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற படவரைஞர்' பயிற்சி நெறியில் சித்தி அடைந்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். மகேசவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ''குடிசார் வரைஞர்'' பயிற்சி நெறியில் சித்தி அடைந்த மாணவர்களின் ஆக்கங்களைக் கொண்ட கண்காட்சி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது

இவ்வைபவத்தில் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

''முறைசாரக் கல்வித்திட்டத்தின்கீழ் பயிற்சிகள்பெறத் தகுதி அடைந்தோருக்கு தொழிற்பயிற்சி யளிப்பதிலும் வேலைவாய்ப்பு அளிப்பதிலும் உள்ளூராட்சி மன்றங்களும் தனியார் நிறுவனங்களும் முன் வர வேண்டும். இதனால் எமது இளைஞர்கள் வேலைவாய்ப்புத்தேடி வெளிநாடு சென்று அலையாமல் எமது பிரதேச பொருளாதார அபிவிருத்திக்குப் பங்காற்ற முடியும்.

''யாழ்ப்பாணம் பல் தொழில்நுட்ப நிறுவனத்தில் 'மனையியல் டிப்புளோமா' பயிற்சிநெறி இல்லாதிருப்பதினால் மனையியல் ஆசிரியர்கள் தெரிவில் தமிழர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள். இதனால் மனையியல் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இக்குறையைப் போக்க தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும்''

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவன அதிபர் திரு எஸ். இராசேந்திரா பேசுகையில்; முறைசாரக் கல்வித்திட்டத்தின்கீழ் பயிற்சிபெறும் மாணவர்கள் பரீட்சைத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சையிலும் தோன்றி சான்றிதழ் பெறுவார்களானால் அதன் மதிப்பு உயரும் என்றார்.

இவ்வைபவத்தில் தொழில் நுட்பக்கல்வி அலுவலர் திரு. ச சுப்பிரமணியம், கல்லூரி அதிபர் திரு எஸ். மகேவேலு ஆகியோரும் உரையாற்றினர்கள். ([வா- எ)

# ''எமது சந்ததிக்கு தேடிவைக்கும் செல்வம் பயன்தரும் மரங்களே''

மாவிட்டபுரம், திங்கள்

''மரம் நாட்டும் பணி எமக்காக மட்டுமல்ல எமது வருங்கால சந்ததிக்கும் பயன்படக்கூடியது. எமது வருங்கால சந்ததிக்கு நாம் தேடிவைக்கும் செல்வம் இம்மரங்கள்தான். ஆகவே பயன்தரும் மரங்களை நாட்டுவதில் நாம் ஆர்வமுடன் செயல்பட வேண்டும்,''

இவ்வாறு மாவிட்டபுரம் லயன்ஸ்கழக ஆதரவில் இடம்பெற்ற மரம் நாட்டும் வைபவத்தில் கலந்துரையாற்றிய தொழிலதிபர் திரு. க. கனகராஜா கூறினார்

காங்கேசன்துறை லங்கா சிமெந்து தொழிற்சாலை வளவில் லயன்ஸ்கழக செயலாளர் ராஜா என். வீரசிங்கத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ் வைபவத்திற்கு லயன் க. குமாரதேவன் தலைமை தாங்கினார்.

தொழிலதிபர் திரு கனகராசா மரக்கன்றுகளை அன்பளிப்புசெய்து முதலாவது மரக்கன்றை சிமெந்து தொழிற்சாலைவளவில் நாட்டி வைத்தார் அடுத்து சிமெந்து தொழிற்சாலை பிரதிபொது முகாமையாளர் திரு.ஏ.பி. ரஞ்சிதபாலன் மரக்கன்று ஒன்றை நாட்டினார்.

இவ்வைபவத்தில் சைவப் புலவர் க சி. குலரத்தினமும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். [வா]

## விவசாயப் பயிற்சி

மண்டைதீவு, திங்கள்.

யாழ் திருநெலவேலி அரச விவசாயப்பயிற்சி பண்ணையின் குறுகியகால பயிற்சித்திட்டத்தின்கீழ் அடுத்தமாதம் ஆரம்பித்துவைக்கப்படவுள்ள பொதுவிவசாயப் பயிற்சி நெறிக்கு 30க்கு மேற்பட்ட பெண்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

நான்குமாதகாலம் நடைபெறும் இப்பயிற்சித்திட்டத்தில் பொதுவிவசாயம், மனையியல், கைப்பணி போன்ற பாடங்களுக்கானபயிற்சித்திட்டங்களும் அமைந்துள்ளதாக திரு. இராமநாதன் தெரிவித்தார். [வா]

வல்லிபுரத்தில்——

# 500 ஏக்கர் நிலத்தில் மாதிரி பனந்தோட்டம்

பருத்தித்துறை நிருபர்

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள வல்லிபுரத்தில் 500 ஏக்கர் நிலத்தில் பனை அபிவிருத்திச்சபை ஒருங்கிணைந்த மாதிரிப்பனந்தோட்டம் ஒன்றினை உருவாக்கியுள்ளது

இப் பனந்தோட்டத்திற்கு சிங்கைநகர் ஒருங்கிணைந்த மாதிரிப் பனந்தோட்டமென பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இம் மாதிரிப் பனந்தோட்ட ஆரம்ப வைபவம் அண்மையில் நடைபெற்றது. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இவ் வைபவத்தையொட்டி விஷேச பூஜைகள் இடம்பெற்றன, ஓய்வுபெற்ற விவசாயப் பணிப்பாளர் திரு பீ. மாணிக்கவாசகர் இப் பனந்தோட்டத்தை ஆரம்பித்து வைத்தார்: பருத்தித்துறை உதவியரசாங்க அதிபர் அலுவலக உதவியாளர் திரு. எஸ், பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் பனை அபிவிருத்திச் சபைப் பணிப்பாளர் திரு. க கனகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மரங்களையும் நாட்டிவைத்தார்.

இவ் விழாவிலே அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் திரு. வி. எஸ், துரைராஜா வடமாகாண தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவு சங்கங்களின் சமாசப் பொதுமுகாமையாளர் திரு. என் இராஜேந்திரம் பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர் திரு. வீ. ஜீ. தங்கவேல் பருத்தித்துறை புலோலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு. என். கணேசமூர்த்தி உடுப்பிட்டி கட்டைவேலி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் திரு. பொ. சத்தியமூர்த்தி பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு எஸ் மணிவண்ணன் ஆகியோர் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர்,

இம் மாதிரிப்பனந்தோட்டத்தை அமைப்பதற்கு மூலகர்த்தாவாக இருந்த புலோலியைச் சேர்ந்த திரு. இரத்தினசிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டு பாராட்டப்பட்டார்;

இம் மாதிரிப் பனந்தோட்டத்தில் இலுப்பை, வேம்பு, சஞ்சீவி, மரமுந்திரிகை அகத்தி போன்ற மரங்களும் நாட்டப்பட்டன. (ஓ)

பலாலி விமானநிலைய விஸ்தரிப்பு

# ''வெளியேறிய விவசாயிகளுக்கு இதுவரை நிவாரணம் இல்லை''

மாவிட்டபுரம், திங்கள்

''பலாலிவிமானநிலைய விஸ்தரிப்பால் தமது விவசாய நிலங்களை விட்டு வெளியேறி நிர்க்கதியாகியுள்ள விவசாயிகளுக்கு இதுவரை எதுவித நிவாரணமும் வழங்கப்படவில்லை வீணாகிக் கிடக்கும் அவர்களின் விவசாய நிலங்களில் காலபோக விவசாயச் செய்கையை மேற்கொள்ள உடனடியாக விசேஷ பாஸ் வழங்க ஆவன செய்யவும்,

இவ்வாறு மயிலிட்டி வடக்கு பிரஜைகள் குழு ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் அவசர கோரிக்கைவிடுத்துள்ளது

மேற்படி பிரஜைகள் குழுத் தலைவர் திரு எஸ் அருணாசலம் செயலாளர் திரு. வி. மாணிக்கம் ஆகியோரால் அனுப்பப் பட்டுள்ள இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விமான நிலைய விஸ்தரிப்பால் வெளியேறி கஷ்டமுறும் விவசாயிகள் குறித்து முன்னரும் முறைப்பாடு செய்திருந்தோம் அதற்கு பலன் எதுவும் கிடைக்கவில்லை.

தமது விவசாய நிலங்களை விட்டு வெளியேறிய விவசாயிகள் இதுவரை எவ்வித நிவாரணமுமின்றி கஷ்டமுற்றுள்ளனர். ஆகவே இது விடயத்தில் உடனடி கவனம் எடுக்குமாறு கோருகிறோம்.

இம் மகஜரின் பிரதிகள் தேசிய பாதுகாப்பமைச்சருக்கும் வடபகுதி இராணுவ இணைப்பதிகாரிக்கும் அனுப்பப்பட்டுள்ளன. [எ]

## கடைசி நேர வரி விளம்பரம்

### தேவை

பாபு தேவி வீடியோ சென்றருக்கு பெண் குமாஸ்தா தேவை ஒருமைல் சுற்றுடலில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். 50, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [C-5456]

### வாடகைக்கு

யாழ். மாநகர எல்லைக்குள் அல்லது அதற்கு அண்மையில் பஸ் போக்குவரத்து உள்ள பாதையில் அல்லது அண்மித்த பாதையில் பஹாய் சமய மாநில சுந்தோருக்கு நீண்டகால அடிப்படையில் ஒரு வீடு அல்லது பொருத்தமான பகுதி வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்கு உடன் தேவை. 31-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். பஹாய் சமய மாநில போதனைக்குழு, C/O. திரு M. செல்வராசா, 5,பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (C-5454)

### தவறிவிட்டது

கிருபை தேவராஜாவுடைய தேசிய அடையாள அட்டை [இல: 615080934V]24-10-86ல் யாழ். பஸ் நிலையத்திலிருந்து நீர்வேலி மினி பஸ்ஸில் இலுப்பையடிச்சந்திக்குப் பிரயாணம் செய்கையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 847, நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். [C-5450

செல்லன் காந்தி ஆகியஎனது தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாளஅட்டை ஆகியன கச்சேரி - காங்கேசன்துறை வீதியில் தவறிவிட்டன கண்டெடுத்தவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வீடமைப்புக் கட்டிடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளவும். [C-5457]

அச்சுவேலிக்கும், கோப்பாய்க்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் மாணிக்கம் தியாகராசா, 36/2, சென். பற்றிக்ஸ் வீதி, கரையூர், யாழ்ப்பாணத்தில் வசிப்பவருடைய அடையாள அட்டை, மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்டவிலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும் [C-5449]


வெலிங்டன்
10-30, 2-30, 4 30 6-30
MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
(Adults Only)
தீபாவளி வெளியீடு
சிவகுமார்-ராதிகா நடித்த
நிலவு சுடுவதில்லை

லிடோ
இன்று முதல்
10-30, 2-30, 4-30, 6-30
HolCroft Convenant
(Full of Suspense and Action) (Color)


## இலங்கை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலுள்ள பாக்கு நீரிணையில் இப்படகுகள்சேவையில் ஈடுபடுத்தப்படுமெனக் கூறிய அவ்வட்டாரங்கள் தற்போது சேவையில் விடப்பட்டிருக்கும் படகுகள் இந்தியாவிலிருந்து தமிழ்த் தீவிரவாதிகள், போராளிகளையும், ஆயுதங்களையும் கொண்டுவருவதைத்தடுப்பதற்குப் போதுமானவையாகாவெனத் தெரிவித்தன.

இஸ்ரேல் விநியோகத்தர் ஒருவர் இப்படகுகளை இலங்கைக்கு வழங்கப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற்றுள்ளாரென்றும், இப்படகுகளை வாங்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் செலவீனத்திலிருந்து கணிசமான தொகை ஒதுக்கப்படுமெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (கே)

## கைதான---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 23ம் திகதி வியாழக்கிழமை கைது செய்யப்பட்டார். இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் அவர் தனது தவறை ஒப்புக்கொண்டார்.

தவறின் தாற்பரியங்களை அவருக்குச் சுட்டிக் காட்டி முதல் தடவை என்பதால் கடுமையாக எச்சரித்து விடுதலை செய்துள்ளோம். இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் தொடருமாயின் அவர்கள் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கநேரும் என்பதை அறியத்தருகின்றோம்.

இத்தகைய தவறுகள் நேராமலும், ஈழம்தபால்சேவையை மேலும் செழுமையாக முன்னெடுத்துச் செல்லவும் அனைவரது ஒத்துழைப்பையும் கோருகின்றோம். [மா]


சயந்தா வீடியோ சென்ரர்
கே. கே. எஸ். றேட், கோண்டாவில்.
எமது புதிய வெளியீடு
லேடி ஜேம்ஸ் பொண்ட்
விஸ்ணுவர்த்தன் சில்க் - அனுராதா-செந்தாமரை
(Pyramid Master) [C 5455]

நியூ விக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடு
'சில்க்' ஸ்மிதாவின்
"லேடி ஜான்சன்"
நியூ விக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்,
தொலைபேசி: 23532 [A 830]

ROCK Engineers &
CONTRACTORS IN WATER SUPPLY WORKS
மழைகாலம் என்றாலும் தேவையான ஆழத்துக்குத் துளைத்து (Drilling) போதிய தண்ணீர் பெறக்கூடிய கிணற்றை 24 மணித்தியாலங்களுக்குள் அமைத்துக் கொடுப்போம்.
தொடர்பு கொள்ளவும்:
றொக் எஞ்சினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

நியூ விக்ரேஸ் புதியபாடல்
இசைத்தட்டு வெளியீடுகள்
[1] கண்ணுக்கு மை எழுது [L. P.]
[2] உன்னை ஒன்று கேட்பேன் [L. P.]
[3] ஆக்கிரோசம் [E. P.]
[4] சிப்பிக்குள் முத்து [L. P.]
[5] ஸ்வரந்தி [E. P.]
[6] ஆயிரம் கண்ணுடையாள் [L. P.]
[7] தெய்வமாலை [L. P.]
நியூ விக்ரேஸ் எலெற்ரோனிக் கொம்பிளெக்ஸ்
23. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,
T. P. 23532 (C 2829)

மிது வீடியோ மூவிசாரின்
இன்றைய புதிய வெளியீடு
கபில்தேவ் - சில்க் ஸ்மிதா
நடித்த
லேடி ஜேம்ஸ் பொண்ட்
(தரமான பிரதி)
மிது வீடியோ மூவீஸ்
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A-3018]


## பாப்பரசர்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த இளைஞரான சிவநேசசூரியகுமார் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதை அறிந்த அதிரடிப் படையினர் ஆஸ்பத்திரியைச் சுற்றிவளைத்தனர். அவ்விளைஞர் தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவரென்றும், அவரை விசாரணை செய்வதற்காகப் பொலநறுவை ஆஸ்பத்திரிக்கு மாற்றுமாறும் கோரினர்.

இச்சந்தர்ப்பத்தில் காயமடைந்த இளைஞரின் தந்தை மட்டக்களப்புப் பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. சாம் தம்பிமுத்துவுக்கு இச்சம்பவம் பற்றித் தெரிவித்ததும், அவர் மட்டு. இணைப்பதிகாரி எம். எஸ். எஸ். சில்வாவுடன் தொடர்புகொண்டு சம்பவத்தை விளக்கிக் கூறினார். இணைப்பதிகாரி, இளைஞர்குணமடைந்ததும் விசாரணைக்காக ஒப்படைக்குமாறு கோரியுள்ளார்.

இச்சம்பவத்தை ஆட்சேபித்து மட்டு. பிரஜைகள் குழு பாப்பரசரின் பிரதிநிதியான அதிவண. அம்புறோஸ் டி பயரிக்குத் தந்தி அனுப்பியுள்ளது இத்தந்தியின் பிரதிகள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியையும், அமைச்சர் லலித்தையும் அவர்கள் கோரியுள்ளனர்.

நேற்று மட்டு மாவட்டத்தில் அதிகாலையில் பொலிசாரும், ஊர்காவற் படையினரும் ரோந்துசேவையில் ஈடுபட்டிருந்தனர். பின் காலை 10 மணி முதல் அதிரடிப் படையினர் ரோந்துசேவை நடத்தினர்.

### மன்னாரில்

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமிலிருந்து சுமார் இருநூறுக்குமேற்பட்ட இராணுவத்தினர் நேற்றுமுருங்கன் நோக்கி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை இரண்டுஹெலிகொப்டர்கள் நேற்று முழுவதும் கிளிநொச்சி பூநகரி இராணுவமுகாம்களுக்கு பறந்து சென்ற வண்ணமிருந்ததைக் காணக்கூடியதாயிருந்தது.

### வாழைச்சேனையில்

வாழைச்சேனைப் பகுதியை நேற்றுக்காலை திடீரென சுற்றிவளைத்த கொமாண்டோக்கள் இருபது பொதுமக்களை கைது செய்துள்ளனர்

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் குறிப்பிடப்பட்ட அவ்விடத்தில் நடத்தப்பட்ட விசாரணையின்போது கொமாண்டோக்களினால் கழுத்து நெரிக்கப்பட்டு கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### ஏறாவூரில்

இதேவேளை ஏறாவூர் புதுக்குடியிருப்புப் பகுதியை சுற்றிவளைத்த கொமாண்டோக்கள் ஒருவரை சுட்டுக்கொன்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [கே]

## தசாகக்கிரியை அழைப்பு



**ச. வைத்தீஸ்வரசர்மா**

[பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தான அர்ச்சகர்]

தோற்றம்: 28-12-1923

மறைவு: 20-10-1986

நிகழும் அக்ஷய ஆண்டு ஐப்பசி மாதம் 3ந் திகதி (20-10-86)திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத்தந்தை பிரம்மஸ்ரீ ச. வைத்தீஸ்வர சர்மா அவர்களது அபரக்கிரியைகள்: தசாகம்: 29-10-86 புதன் காலை 10 மணி. மாசியம்: 30-10-86 வியாழக்கிழமை. சபிண்டீகரணம்: 31-10-86 வெள்ளிக்கிழமை. கிருகயக்ஞம்: 1-11-86 சனிக்கிழமை.

மேற்படி கிரியா காலங்களில் எமது உறவினர்கள், உற்றவர்கள், நண்பர்கள் ஆகிய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். குறிப்பு: தபால் தொடர்புகளை சீரற்ற காரணத்தை முன்னிட்டு இவ்வழைப்பை ஏற்றுக்கொள்வீர்களென எதிர்பார்க்கும்:

மனைவியும், பிள்ளைகளும்.

எமது தந்தையின் மறைவையொட்டி நேரிலும், அனுதாபச்செய்திகள் மூலமும் மனச்சாந்தி வேண்டிய உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மேலும் பலவகையில் ஈமக்கிரியைகள் சிறப்புற நடைபெற உதவிய பொன்னாலை தேவஸ்தான பரிபாலன சபையினருக்கும், வழிபடுவோர் சபையினருக்கும் ஏனையோருக்கும் எமது இதயங் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இங்ஙனம்,

திருமதி வைத்தீஸ்வரசர்மா குடும்பத்தினர்.

(C 5442)

## மன்னாரில்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தாபனத்துக்களித்த பேட்டியொன்றில் இதனைத் தெரிவித்த அமைச்சர் உத்தியோகப் பற்றற்ற முறையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியும் எனத் தெரிவித்தார். ஆயினும் அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பதை அவர் தெரிவிக்கவில்லை.

இதுபோன்ற விடயங்களில் பிரசாரம் மேற்கொள்ளாமலேயே தீர்வு காண்பது நலம் எனத் தெரிவித்த அமைச்சர் இப் பிரச்னையில் நியாயமானதொரு தீர்வு விரைவில் ஏற்படுமெனத் தாம் நம்புவதாகக் கூறினார். [ஊ]

## இன்றுமுதல்---

[1ம் பக்க தொடர்ச்சி]

கோள் விடுத்துள்ளது.

இந்தஒழுங்குமுறைகளை மீறுபவர்கள் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் விடுதலைப்புலிகள் இயக்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுசம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இன்று [28ந்திகதி] தொடக்கம் யாழ்.கோட்டை இராணுவமுகாம், பலாலி இராணுவமுகாம்களுக்கு பாஸ், வங்கி அலுவலகள் மற்றும் இராணுவமுகாமுடன் அலுவல்கள் காரணமாக தொடர்பு கொள்ளும் பொதுமக்கள் யாவரும் நாம் குறிப்பிடும் பாதைகளிலேயே இம்முகாங்களுக்கு சென்றுவருமாறு கேட்டுக் கொள்கின்றோம். வேறு பாதைகள் மூலம் இம் முகாங்களுக்கு செல்ல வேண்டாமென கேட்டுக் கொள்கின்றோம். இதனை மீறியாராவது நாம் குறிப்பிடாத பாதைகளில் செல்வார்களேயானால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்'' [மா]

## பிரயாண ஒழுங்குகள்

**சவூதியில்:**

1. AIRLINE ACCOUNTANTS
2. SALES PROMOTOR
3. TICKET and RESERVATION AGENT.
4. TRAFFIC OFFICER

[ACCOMODATION and OTHER BENEFITS]

இவற்றுக்கான வருமானவாய்ப்புக்கள் உடனடியாக ஒழுங்குசெய்து கொடுக்கப்படும். எமது காரியாலயத்தில் உடன் தொடர்புகொள்ளவும்.

**குவைற்:** செல்வதற்கு கீழ்க்குறிக்கப்படும் பெயருடையோர் எமது காரியாலயத்தில் உடன் தொடர்பு கொள்ளவும்.

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஜோசப் டொன்பொஸ்கோ-ராஜரட்ணம் | G 0343328 |
| 2. | திரு S ஈஸ்வரநாதன் | H 0066839 |
| 3. | திரு S ஐபங்கரன் | H 0355975 |
| 4. | திரு S. முருகானந்தன் | H 0324752 |
| 5. | திரு S தேவதாசன் | H 0104191 |
| 6. | திரு. M. யோகநாதன் | F 019118 |

**GROUP ATLANTIC TRAVELS**

163, HOSPITAL ROAD, JAFFNA.

[A 2824]



## பிரயாண ஒழுங்குகள்

**டென்மார்க் ஜேர்மனி குவைத் சவூதிஅரேபியா**

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்து செல்வார்.

குவைத்தில் கீழ்க்காணும் வருமானவாய்ப்புக்கள் உண்டு. Cleaners, house boys, Gardeners, House drivers, house Cook Sales boys and Girls ஆகியவற்றிற்கு செல்லவிரும்புவோர் உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி Labourers ஆக செல்லவிரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்லவிரும்புவோர் 1-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்

விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-

**N. Bala**

பஸ் இல. 764 திருச்செல்வம் வீதி,
பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.
கோண்டாவில் கிழக்கு

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

[A-2817]


### அமரர்

## இராமசாமிபிள்ளை

"திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற அமுதின் இனிய அறிவுக்கூற்றை அனுபவக்கூற்றாக்கி வாழ்வாங்கு வாழ்ந்தவர் வல்வெட்டித்துறைப் பெருங்குடி வர்த்தகப்பிரமுகர் திரு. வ. வ. இராமசாமிப்பிள்ளை அவர்கள்.

கடல் வணிகம் சட்ட அங்கீகாரத்துடன் நிகழ்ந்த காலையில அமரர் திரு வ. இ அவர்கள் கடலை விளையாட்டுத் திடலாகக் கொண்டு ஆழக்கடல்களின் அகல நீளங்களை அளந்ததுண்டு. கடலில் தன் வேலையை ஆரம்பித்த இவர் மேலை நாடுகள் வரை பலமுறை சென்று 'மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்' என்று பாரதி போதனையில் சொன்னதைத் தன் சாதனையில் செய்தவர். இவருக்குச் சொந்தமாயிருந்த பெரிய பாய்மரக்கப்பல்களான ஸ்ரீநரசிம்மசாமி, ஸ்ரீமகாலட்மி, திருநிலையாயகி என்பன கிழக்கே பர்மா வரையிலும் மேற்கே ஆபிரிக்கக் கண்டம் வரையிலும் சென்று தமக்கு நிறைந்த பொருளையும் தமிழர்க்குச் சிறந்த புகழையும் கொண்டு வந்ததுண்டு. இவருக்குரிய இதர சிறு பாய்க்கப்பல்கள் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே இடையறாது ஓடி தாயையும் சேயையும இடை பிரிக்கும் உவர்க்கடலை ஊடுருவி இனிமைத் தொடர்பை ஏற்படுத்தின.

ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபன அங்குரார்ப்பணம் செய்ததோடு தான் தொட்ட வர்த்தகத்துறை எல்லாம் துலங்க வைத்தார் இவர். வடக்கிற்கு வளம் ஊட்டவும் வட பகுதித் தமிழருக்கு வாழ்வு காட்டவும் இப்பெருமகன் இன்னுஞ்சில பிரமுகர்களுடன் இணைந்து 'வடஇலங்கை அபிவிருத்திச் சங்கத்தை' ஆரம்பித்து அதற்குத்தான் முதலையும் மூளைவளத்தையும் முழு நேர உழைப்பையும் மூலதனமாகக் கொடுத்தார்.

தமிழினத்திற்கு நல்விமோசனம் காட்ட இப்பெரியவர் கட்சி அரசியலிலும் கனங்காத்திரமான பங்களிப்பைச் செய்ததுண்டு.

தந்தை செல்வாவிற்கும் தனக்கு ஒரே வயது என்றுஅடிக்கடி உவகையுடன் சொல்லிக்கொள்ளும் அமரர் தந்தை செல்வாவின் இன, இயக்க, இலட்சிய பணிகள், பயணங்கள் அனைத்திலும் ஒல்லும் வகையிலெல்லாம் உறுதுணையாக இருந்தார். தமிழரசுக் கட்சியிலும பின்னர் தமிழர் விடுதலைக்கூட்டணியில் அங்கம் வகித்த திரு வ இ. தொடர்ந்தும் வல்வைக்கிளையின்முதல்வர் இடத்தையும் இயக்க நிதிப் பட்டியல்களில் முதல் இடத்தையும் அலங்கரித்ததுண்டு.

1961ல் சத்தியாக்கிரகம் தொடங்கி சட்டமறுப்பியக்கமாகத் தொடர்ந்த வேளையில் -வடகிழக்கில் அரச இயந்திரமே இயங்கமுடியாதிருந்த வேளையில் அமரர் அதி தீவிரமாக இயங்கியதுண்டு. அறப்போரில் தானும் பங்கெடுத்ததோடு தொண்டர்களின் தாகசாந்திக்காகப் பருகப் பானமும் பசியாற உணவும் தொடர்ந்து கொடுத்துதவினார். அதன் விளைவு அன்று நடந்த அம்மையார் ஆட்சியின் எதிர்ப்பிற்கும் வெறுப்பிற்கும் இலக்கானார். சத்தியாக்கிரகம் முறியடிக்கப்பட்ட வேளையில் தமிழ்த் தலைவர்களுடன் இவரையும் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

சாதி ஒழிப்பிலும் சமூகப் புனரமைப்பிலும் கூட இம்முதியவர் தன் முத்திரையை ஆழப்பதித்தவர் என்பதற்கு ஆதாரமான நிகழ்ச்சியுண்டு சில அன்பர்கள் என்னை அணுகிப் பெரியவர் தர்மகர்த்தா ஆக இருந்த வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தாம் வழிபட ஆவன செய்திடக் கேட்டார்கள் நாம் பெரியவரை அணுகினோம். உவப்போடு ஒப்புக்கொண்ட அவர் உளப்பூர்வமாக ஒத்துழைக்க முன்வந்தார்.

மேற்குறித்த அம்மன் ஆலயத்திற்கு ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலமாக தேவஸ்தான சபைத் தலைவராக அவ ரிருந்து ஆற்றிய பணிகள் அனந்தம்... அனந்தம். இந்த முத்துமாரி அம்மன் ஆலயம் நிலைகின்றவரையில் அதற்காய முற்றுமுழுதாய் தன்னை அர்ப்பணித்த இப் பெரியவர் நாமமும் நிலைக்கும்! அமரர் வ இ அவர்கள் கட்டிய வல்வை சிதம்பராக் கல்லூரியின் நடுநாயகமாக அமைந்துள்ள மண்டபம் நிமிர்ந்து நிற்கின்ற வரையும் இவர் நினைவும் நிலைநிற்கும்.

**கனக. மனோகரன்**

பொலிசாரைத் தாக்கிய குண்டர்கள்

## சந்தேகநபர்கள் அறுவரையும் மீட்டுச் சென்றனர்

கொழும்பு, திங்கள் நுவரெலியாவில், அரசாங்கத்திற்குச் சொந்தமான சம்பியன் தோட்டத்தில் சட்ட விரோதமாக இரத்தினக்கற்கள் அகழ்ந்த 6 பேரைக்கைது செய்த பொலிசார்மீது தாக்குதல் சம்பவமொன்று இடம் பெற்றுள்ளது

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, சட்ட விரோதமாக இரத்தினக் கற்களை அகழ்ந்த 6 பேரையும் பொலிசார் கைதுசெய்து பொஹவந்லாவைப் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லும்போது 300க்கும் அதிகமான குண்டர்கள் பொலிசாரை வழிமறித்து பொலிசார்மீது கற்கள் வீசினார்கள்.

கெரில்லாப் பாணியில் தாக்குதலை மேற்கொண்ட குண்டர்கள் பொலிஸாரிடம் இருந்து சந்தேக நபர்கள் அறுவரையும் மீட்டுச் சென்றனர். [ஔ]

## இன்றைய பலன்

மாதம்: ஐப்பசி

திகதி: 11 [28-10-86]

செவ்வாய்க்கிழமை

நக்ஷத்திரம்: மகம் மு. ஆ வரை

திதி: தசமி பி. ப. வரை

மேடம்: புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடுவதில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள் கடமையில் கருத்துவேற்றுமைகள் ஆகலும்.

இடபம்: மனைவாழ்வு சிறக்கும் பொதுசனத் தலைமையும் கிடைக்கும் நன்மாற்றங்களுக்கும் ஆலோசனை பிறக்கும்.

மிதுனம்: பிறர் பொருள் வரமுண்டு. பெரியோர் ஆதரவு முண்டு பொதுப்பணிகளிலும் ஆர்வம் பிறக்கும்

கடகம்: பொருள் விரயமுண்டு. கடன்படவும் நேரிடும். குடும்பத்திலும் புயல் வீசும். எதிலும் அமைதியுடன் இருக்கவும்.

சிங்கம்: வீட்டில் தியசருமங்கள் இடம்பெறலாம். பிரிவுத்துயரும் வாட்டும். பண நெருக்கடி தோன்றும். அவதானம் நன்று.

கன்னி: குடும்பம் மகிழ்ச்சி நிறைந்ததாகவிருக்கும் நண்பர்களாலும் மகிழ்ச்சியுண்டு. தொழிலில் சமநிலையுமுண்டாம்.

துலாம்: நினைத்த காரியம் தடைப்படும் குறுக்குவழியால் பிரச்னைகள் உருவாகும் எதையும்தாங்கும் இதயவேண்டும்.

விருச்சிகம்: வரவில் உயர்வு காணும். தன்தொழில் சிறப்புமுண்டு. வாகனசுகமுண்டு. நன்னாள்.

தனுசு: பல வழிகளிலும் புகழ்குவியும். இல்லத்திலும் இனிமைதவழும். தொழிலால் மகிழ்ச்சியுண்டு. சுபதினம்.

மகரம்: பகைகள் தோன்றும். நம்பிக்கை மோசடி நடக்கும். தூரத்துச்செய்தி மனக் கவலைதரலாம்.

கும்பம்: கஸ்ஸ்கிரசேர்க்கையுண்டு. தொழில் முயற்சி பலிக்கும். உற்சாகமாக நாளைக் கழிப்பீர்கள். சுமாரானதினம்.

மீனம்: சிறுவிபத்தும் ஏற்படலாம். அக்கினி ஆயுத பீடையுண்டு தொழில் மந்த நிலையும் தோன்றும். துக்க தினம்.

**திருமலை**
**க. வே. ரவீந்திரன்**

## விஞ்ஞானதின நிகழ்ச்சிகள்

பருத்தித்துறை. திங்கள் யாழ் மாவட்டப்பாடசாலைகளுக்கான விஞ்ஞானதின நிகழ்ச்சிகள் புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் நடைபெற்றன. யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் இவ்விஞ்ஞான தின நிகழ்ச்சிகளை ஆரம்பித்துவைத்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத் தலைவர் பேராசிரியர் எஸ் சிவஞானசுந்தரம், கலைப் பீடத்தலைவர் பேராசிரியர் எஸ் பாலகிருஷ்ணன் விஞ்ஞான பீடத்தலைவர் பேராசிரியர். வீ கே. கணேசலிங்கம் ஆகியோர் விரிவுரைகளை நடத்தினார்கள். 16 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ. மாணவிகள் இவ்விஞ்ஞானதின நிகழ்ச்சிகளிலே கலந்துகொண்டனர். இங்குநடைபெற்ற விஞ்ஞான பேச்சுப்போட்டியில் உடுவில் மகளிர் கல்லூரி மாணவி செல்வி சுஜாதா முதலாமிடத்தைப்பெற்றுக்கொண்டார். (வா)


## யாழ். அபிவிருத்திச்சபை அறிவித்தல்

1986ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ். அபிவிருத்திச்சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலைப்பகுதி) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்க திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்களில் கீழ் காட்டப்பட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10 00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும், கிரயப் பணத்தையும் கரைச்சி யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1986ம் ஆண்டு நவம்பர் மாதல் 10ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை கரைச்சி உப அலுவலகத்தில் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| யாழ். அபிவிருச்சிச்சபை உப அலுவலகம் | வேலைகள் பெயர் | ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப் பட்ட தொகை | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|
| கரைச்சி | மீன்சந்தை அமைத்தல் | 35,000/- | 50/- | 25/ |
| | நூல்நிலையக் கட்டிடம் | 100,000/- | 100/- | 50/- |

அன்ரன் அல்பிரட்
பிரதிச் செயலாளர் (நிர். ச. வே.)
யாழ். அபிவிருத்திச் சபை.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

[A 3011]

மாணவர் முன்னணி — மறுமலர்ச்சி உதைபந்தாட்டப்போட்டி

# சுன்னாகம் ஸ்கந்தவரோதயா 6—2 கோல்களால் வெற்றி


யாழ்ப்பாணம், செவ். மாணவர் முன்னணியும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து, யாழ் மாவட்டக் கல்லூரிகளிடையே நடாத்திவரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின் 2-வது நாள் ஆட்டத்தில், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியை வெற்றி பெற்றது.

இப்போட்டி தொடங்கி 4 நிமிடங்களில் இந்துக் கல்லூரி முதலாவது கோலைப் போட்டது. இதைத் தொடர்ந்து ஸ்கந்தவரோதயாக் கோஷ்டியின் ஆட்டத்தில் வேகம் காணப்பட்டது. இடைவேளைக்கு முன்பாகவே ஸ்கந்தா அடுத்தடுத்து 4 கோல்களைப் போட்டு முன்னணியில் நின்றனர்.

இடைவேளையின் பின் ஸ்கந்தா மேலும் இரு கோல்களைப் போட்டது. ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது இந்து 2-வது கோலைப் போட்டது. இறுதியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 6—2 கோல்களால் வெற்றி பெற்றது.

ஸ்கந்தவரோதயாக் கோஷ்டியின் சார்பில் எஸ். ரவீந்திரகுமார் 3 கோல்களையும், எஸ் நற்குணராசா, பி சரவணபவானந்தன், என் வசந்தராஜ் ஆகியோர் தலா ஒரு கோலை போட்டனர். வட்டுக்கோட்டை இந்துக் கோஷ்டியின் சார்பில் பிரான்சிஸ் பெரேரா, தவதேவதாசன் ஆகியோர் கோல்களைப் போட்டனர்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் கடும் மழையின் மத்தியில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு எம். தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார். (வி)



## இறுதி போட்டிக்கு தெரிவு

பண்டத்தரிப்பு, திங். யாழ். கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 13-வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது.

கடந்த 25-ம் திகதி சனிக்கிழமையன்று யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி யாழ். ஒஸ்மானியா கல்லூரியை 3—1 கோல்களினால் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தெரிவானது. (இ)

## உதைபந்தாட்டம்: இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், செவ். மாணவர் முன்னணியும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடாத்தும், யாழ் மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டியின், இன்றைய மோதலில் முதல் ஆட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி மோதும்.

2-வது ஆட்டத்தில் இளவாலை சென் ஹென்றிஸ் கல்லூரியை எதிர்த்து கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மோதும்.

இவ்விரு போட்டிகளும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று நடைபெறும். (வி)

## தற்கொலை

பருத்தித்துறை, திங்கள். கணவன் நஞ்சு அருந்தியதைக்கண்ட மனைவி நஞ்சைப் பறித்துத்தானும் குடித்தார். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட இருவரும் ஐந்து பிள்ளைகளையும் தவிக்கவிட்டு அங்குமரணமானார்கள்.

இப்பரிதாபகரமான சம்பவம் வண்ணான்கேணி என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது. சி. இ தினசிங்கம் (35-வயது) என்பவரும் அவரது மனைவியுமே நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டவர்களாவர்.

ஐந்துபிள்ளைகளின் பெற்றோரான இவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னையினாலேயே நஞ்சருந்தினராம். நஞ்சருந்திய இருவரும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமாகினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (சி)


## பிரயாண ஒழுங்குகள்

| இடம் | பெயர் | பாஸ்போட் இலக்கம் |
|---|---|---|
| உரும்பிராய் | S. வரதராஜன் | H 0348449 |
| மல்லாகம் | K A வசந்தநாதன் | H 022 801 |
| மானிப்பாய் | N S சிவகுமார் | G 0345912 |
| உரும்பிராய் | T. அருமைநாதன் | G 0166393 |
| யாழ்ப்பாணம் | N. சுந்தரலிங்கம் | G 0021930 |
| நல்லூர் | P லோகநாதன் | E 2568 5 |
| அச்சுவேலி | T L C. சேவியர் | H 0380905 |
| ,, | M. V அனந்தராஜா | H 0457285 |
| ,, | R. மகேந்திராஜா | J 0036946 |
| உடுவில் | N. நவசீலன் | G 014 4 0 |
| ஊர்காவற்றுறை | J. வலென்ரீன் | F 196209 |
| வேலணை | S உதயகுமார் | J 00 5130 |
| சந்தர்மடம் | V. விஜயகுமார் | J 004 52 |
| தெல்லிப்பழை | V. வரதராஜா | G 0053085 |
| கந்தர்மடம் | R. பாஸ்கரன் | H 0370041 |
| உரும்பிராய் | S. சிறீதரன் | H 0467233 |
| கந்தர்மடம் | S. ஜெபராஜசிங்கம் | H 0008227 |

மேலே குறிப்பிட்ட பெயர்கள் கொண்ட அனைவருக்கும் ஈராக்குக்கு விசா வந்துள்ளது உடனடியாக எமது காரியாலயத்துக்கு வந்து சந்திக்கவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு: இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 2827]


## உதைபந்தாட்டம்:

# சென். பற்றிக்ஸ் கோஷ்டி சென். ஜோன்ஸை வென்றது!

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிக்கும், சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், சென். பற்றிக்ஸ் கோஷ்டி வெற்றி பெற்றது.

பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் முன்னிலையில் நடைபெற்ற இப்போட்டியின் ஆரம்பத்தில் சென் பற்றிக்ஸ் கோஷ்டி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டது. இதன்பின் சென். ஜோன்ஸ் கோஷ்டியின் ஆட்டம் சிறப்பாக இருந்த போதிலும் கோல்கள் போடும் பல சந்தர்ப்பங்களை நழுவவிட்டு விட்டது. இடைவேளைக்கு பத்து நிமிடங்கள் இருக்கும் போது சென். ஜோன்ஸ் கோஷ்டி ஒரு கோலைப் போட்டது. இடைவேளைக்கு பின்பும்சென். பற்றிக்ஸ் மேலும் ஒரு கோலைப் போட்டு ஆட்டமுடிவில் 3—1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. திருஞானசம்பந்தர் மத்தியஸ்தம் வகித்தார்.

'பி' பிரிவு ஆட்டத்திலும் சென். பற்றிக்ஸ் 1—0 கோலால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு எஸ் ராமநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

'ஸி' பிரிவுப் போட்டியில் சென். ஜோன்ஸ் கோஷ்டி 2—1 கோல்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திரு. ஏ. செ மாவைமுத்து மத்தியஸ்தம் வகித்தார்.

இவ் ஆட்டங்கள் அனைத்தும் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. (வி)


## 1-வது வருட நினைவஞ்சலி



ப. கிருபாகரன் (சத்தியன்)

வீரஉதிப்பு: 10-02-1969
வீரமரணம்: 07-11-1985
திதி: 28-10 86

ஈழ விடுதலைப் போரில்
மண்ணுக்கு உயிர்
கொடுத்து
மறைந்த எம்
செல்வனுக்கு
இன்று நினைவுநாள்.
காலம் உருண்டது.
ஒரு வருடம் ஆனது
ஆனாலும் எம் நெஞ்சம்
எப்போதும்—
உன் நினைவின்
உறைவிடம் ஆனது.
சரிந்த போதும்
சாதனை நிகழ்த்திய
எங்கள் இளைய
வேங்கையே!
மாறாத்துயரில் நாம்
வாடினாலும்
மாண்பு மிகு வீரனாய்
மண்ணுக்குப் பெருமை
சேர்த்தாய்.
உதிக்கும் நம் ஈழம்
உன் பெயரும்
சொல்லுமடா!

உன் ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா,
சகோதர சகோதரிகள்,
உறவினர், நண்பர்கள்.
குமரபுரம், பரந்தன்.
(C 5380)


## சங்குவேலி ஐ. வி. கழகம் வெற்றி

யாழ்ப்பாணம், செவ். கைதடி வடக்கு செல்வா சனசமூக நிலையத்தால் வடமகாகண ரீதியில் நடத்தப்பட்ட தாச்சி விளையாட்டுப் போட்டியில் சங்குவேலி ஐக்கிய விளையாட்டுக்கழகம் முதலமிடத்தையும் சுன்னாகம் கலைவாணி வி. க. இரண்டாமிடத்தையும் சாவகச்சேரி சித்தி விநாயகர் வி. க. மூன்றாமிடத்தையும் பெற்றது

கைதடி கிராமரீதியில் நடத்தப்பட்ட தாச்சிப் போட்டியில் சரஸ்வதி வி. க. (கைதடி மேற்கு) முதலாமிடத்தைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக்கொண்டது.

சுமார் 50 வி. க. கழகங்கள் பங்குகொண்ட இத்தாச்சி விளையாட்டுப் போட்டிக்கு திரு பொ. திருநாவுக்கரசுவும். திரு வா. விஜசித்தம்பியும் நடுவர்களாக கடமையாற்றினார்கள். (ஒ)

## மறைவு குறித்து அஞ்சலி

யாழ்ப்பாணம், செவ். "ஆசிரியர் பாடசாலையின் முக்கியமான அங்கம் என்ற கருத்துக்கமைய அத்தியார் இந்துக்கல்லூரியில் கடமையாற்றிய பண்டிதை அவர்களின் இறப்பால் விண்ணுலகம் மேலும் வளம் பெறுகின்றது"

இவ்வாறு நீர்வேலி பண்டிதை சத்தியதேவிதுரைசிங்கத்தின் மறைவையொட்டி இடம்பெற்ற அஞ்சலி கூட்டத்தில் உரையாற்றிய அத்தியார் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபரும், கோப்பாய் கொத்தணி பாடசாலைகள் அதிபருமான திரு. பூ. க. இராசரத்தினம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்: பண்டிதை சத்தியதேவி கல்வி நிலையங்கள் மகளுக்கு வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் தேவையான வலிமையையும், திறமையையும், பொறுப்பையும் அளிக்கும் தன்மை வாய்ந்ததாக அமைய வேண்டுமென்ற கருத்தைக் கூறிவந்தார் என்று கூறினர்

திரு ரி மயில்வாகனம், திரு க. இ குமாரசாமி, திருமதி க. புவனேந்திரன் மற்றும் பலர் அன்னாரது சமூகசேவை பற்றியும். கல்விச்சேவை பற்றியும் அஞ்சலி உரையாற்றினார்கள். (சி)


## பிரயாண ஒழுங்குகள்

| இடம் | பெயர் | பாஸ்போட் இலக்கம் |
|---|---|---|
| அளவெட்டி | K. T. தவராஜா | H 0209002 |
| யாழ்ப்பாணம் | I A C ஜஸீர் | J 0000022 |
| வேலணை | P. சுந்தரலிங்கம் | J 0 34550 |
| | K K கோபாலசிங்கம் | H 0361132 |
| | T. மரியநேசன் | H 0300646 |
| நெல்லியடி | J ஜெகசோதி | G 019 562 |
| | S M தர்மசீலன் | H 0304655 |
| | S K நாஞ்சில்மனோகரன் | H 0364731 |
| | K. செல்வகுமார் | H 0282815 |
| | S. சரலோகநாதன் | F 121178 |
| | S. செல்வராஜன் | G 0322931 |
| | R. அழகராஜா | H 0349912 |
| | T. அல்பிரட் | H 0401420 |
| | V. N. நற்குணநாயகம் | J 0040415 |
| | K. சிவநாதன் | G 0077694 |
| | R S. நந்தகுமார் | H 0310826 |
| | P மகேந்திரன் | G 01 2911 |
| | R T இராஜேந்திரன் | H 0087104 |
| | N மகேந்திரம் | G 0323566 |
| | N. வடிவேலு | F 302887 |
| | S. இராசலிங்கம் | G 0344253 |
| | V K. நித்தியநாதன் | H 0376317 |
| | S. T வசந்தராஜா | H 0434983 |
| | A. K. உதயராஜா | H 0314269 |

மேற்குறிப்பிட்ட பெயர்கொண்ட நபர்களுக்கு 'ஈராக்'குக்கு விசா வந்துள்ளது, உடனடியாக எமது காரியாலயத்திற்கு வந்து தொடர்புகொள்ளவும்.

**யூனிவேசல் ஏஜென்சி,**

125, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பி. கு.: ஆயுர்வேதக் கல்லூரிக்கு அருகாமை, பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக (A-2828)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
செவ்வாய்க்கிழமை 28-10-86

# கொள்ளைகள் தொடராதிருக்க இயக்கங்கள் செயற்பட வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்பு

யாழ்ப்பாணம், செவ்

''போராளிகள் சூழ்ந்துள்ள கொட்டடிப் பகுதியில் அவர்களின் கட்டுப்பாட்டை மீறி பேராசிரியர் குமாரவடிவேலுவின் வீட்டில் இடம் பெற்ற கொள்ளையை அம்பலப்படுத்தவும், இவ்வாறான சம்பவங்கள் தொடராதிருக்கவும் விடுதலை இயக்கங்கள் உத்தரவாதமளிக்கவேண்டும்.''

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் திரு. குமாரவடிவேலுவின் கொட்டடி இல்லத்தில் இடம்பெற்ற கொள்ளை தொடர்பாக யாழ் பல்கலைக் கழக மாணவர் அமைப்புக்குழு மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

மேற்படி மாணவர் அமைப்புக் குழுவின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''தமிழீழ விடுதலைப் போராட்டத்தில அறிஞர்களின் கல்விமான்களின் பங்கையும் சேவைகளையும் போராட்டத்தின் இந்த வளர்ச்சி நிலையில் நாம் அறியாதவர்களாக இருக்க முடியாது. ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் கல்விமான்களின் பங்கை சரியான வகையில் பெற்றுக்கொள்ளா விட்டால் போராட்டத்தின் முடிவில் முழு மக்களுக்குமான விடுதலையை உத்தரவாதப்படுத்த முடியாது போய்விடும்'' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

## மடுக்கோவிலில் மக்கள் தஞ்சம்

புங்குடுதீவு, திங்கள்

அண்மையில் மன்னார், அடம்பன் பகுதிகளில ஏற்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்து தம்பனை, பெரிய பண்டி ஆகிய இடங்களிலும் வன்செயல்கள் உருவாகியுள்ளன. இதனால் இப்பகுதிகளைச் சேர்ந்த பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டு மடுக்கோவிலில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். (ரா)

## சிவில் நிர்வாகம் ஏற்பட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கும் பொறுப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பிரிவு ஏற்றுத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது.

இராணுவம் கட்டுப்பாட்டிலுள்ள விடுதலைக்குரிய பிராந்தியங்களில் தமிழீழத் தேசச் சட்ட ஒழுங்கின் கீழ் தமிழீழக் கிராம நீதிமன்றுகள் கிராம ரீதியாகச் செயற்பட்டுத் தமிழீழ மக்களிடையே நீதியை நிலைநாட்டிவருகிறது.

சுகாதார ரீதியாக சகல உணவு சம்பந்தப்பட்ட கடைகள் முதல் பலசரக்கு கடைகள் வரை நேரடியாக நிர்வகிக்கப் படுகின்றன. எமது மருத்துவக்குழு போராட்ட காலகட்டத்திற்கேற்ற முதலுதவி வைத்திய நிலையங்களை நிர்வகித்து தமிழீழ மக்களிடையே சுகாதார வைத்திய சேவைகளைப்புரிந்து வருகிறது.

இத்துடன் போக்குவரத்து, கல்வி, உள்ளூராட்சி நிர்மாண வேலைகள், அத்தியாவசிய பொருட்கள் விநியோகம், தமிழீழ கலாச்சார, பொருளாதார திட்டமிடலுடன் கூடிய வேலைத்திட்டங்கள், பொதுசனத்தொடர்பு ஸ்தாபனங்கள், நிதி, இயற்கை வளங்களை பாதுகாத்து பயன்படுத்தலுடன் மிகமுக்கியமாக விவசாயத்தில் தன்னிறைவுடன் கூடிய உணவு உற்பத்தியை திட்டமிட்டு செயலாற்றி வருகிறோம்.

நெருக்கடி காலத்தில் ஏற்படும் உணவுப் பற்றுக்குறையை நிவர்த்தி செய்ய, அண்டை நேச நாடுகளில் இருந்து உணவை தருவிக்க வேண்டிய சூழ்நிலை கூடக் காணப்படுகிறது.

இவ்வாறான நிர்வாகஅமைச்சுகளுடன் ஏனைய நிர்வாக அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய ''தமிழீழ செயலகம்'' (கச்சேரி) 1987இல் இயங்கும்.

ஒருதனி அரசை நிர்மாணிக்கும் இந்த உரிய இலட்சியப்பணியில் சகலதமிழ்பேசும் மக்களையும் பங்களிக்குமாறு உரிமையோடு கேட்டுக்கொள்கிறோம்.'' (மா)

## பூஸா முகாம் தமிழ் கைதிகளின் விசாரணைகளை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு, திங்கள்

பூஸா தடுப்புமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தொடர்பான விசாரணைகளைத் துரிதப்படுத்த தேசிய பந்தோபஸ்து அமைச்சு நடவடிக்கை எடுத்துவருகின்றது.

இதுசம்பந்தமாகப் பூஸா தடுப்பு முகாமுக்கு அண்மையில் விஜயம்செய்த அரசாங்கத்தின் பாதுகாப்பு ஆலோசகர் திரு சிட்னி டி சொய்சா பூஸா முகாம் அதிகாரிகளுக்கு என்னவிதமான நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆலோசனை கூறியுள்ளார்.

தற்போது இந்த முகாமில் ஆயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் உள்ளனர். இவர்களில் 200 பேர் தொழிற் பயிற்சி பெறுவதற்கு விருப்பம் தெரிவித்ததையடுத்து களுத்துறையிலுள்ள புதிய தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (கே)

## வியாபார---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பெறும் மோசடிகளைத் தவிர்க்கும் முகமாகவும் அனைத்து வியாபாரத்தொழில் ஸ்தாபனங்களும் 87 முதல் எமது அனுமதிப்பத்திரத்தைப் பெற்று இயங்க வேண்டும்'' இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (மா)

## பிரான்ஸிலிருந்து---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ணங்களில் அநேகமான டாக்டர்கள் சேவையாற்றுவதற்கு மறுப்புத் தெரிவிப்பதால் இவர்கள் பிரதானமாக அப்பகுதிகளில் சேவையாற்றுவார்கள். இவர்களின் சேவைக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதுடன், இவ்வாறு இவர்களின் சேவைக்கான ஒப்பந்தமொன்றையும் கைச்சாத்திடவுள்ளது.

இவர்கள் படைவீரர்கள், தமிழ்ப் போராளிகள், பொதுமக்கள் என்ற பேதமின்றிச் சகலருக்கும் இலவச சிகிச்சையளிப்ப. இலங்கையில் தற்போது நடைபெறுவது போன்று கலவரங்கள் நடைபெறும் 40 நாடுகளுக்கு இவர்கள் சென்று சேவையாற்றவுள்ளனர். (கே)

## படையினர் சுட்டு வயோதிபர் காயம்

கொழும்பு, திங்கள்

மட்டக்களப்பு முறிஞ்சா மூலையருகில் வயலொன்றில் படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையே நடைபெற்ற நேரடி மோதலின்போது படையினர் சுட்டதில் 55 வயதான வயோதிபர் ஒருவரும் தீவிரவாதி ஒருவரும் காயமுற்றதாக தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இச்சம்பவம் நேற்று நடைபெற்றது. காயமுற்ற தீவிரவாதி சயனைட் அருந்தி தற்கொலை செய்ததாகவும் காயமடைந்த வயோதிபர் மட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது. (கூ-ஊ)

## ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் தினங்கள்

யாழ்ப்பாணம், செவ்

அக்டோபர் மாதத்திற்கான யாழ். தபாற்கந்தோர் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் யாழ் கோட்டை முகாமின் பின்வரும் திகதிகளில் வழங்கப்படுமென்று யாழ். தபால் அதிபர் அறிவித்துள்ளார்.

30-ம் திகதி வியாழக்கிழமை அல்லைப்பிட்டி, குருநகர், ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் கடை வீதி, நல்லூர், நல்லூர்க்கோவில், நச்சிமார் கோவிலடி, சோனகர் தெரு.

31-ந்திகதி வெள்ளிக்கிழமை மண்டைதீவு, நாவாந்துறை, நீராவியடி, பிடாரிகோவிலடி, சண்டிலிப்பாய், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை.

இதேவேளை 23-ம் திகதி வியாழக்கிழமை ஓய்வூதியம் பெறத்தவறியவர்களும் மேற் குறிப்பிட்டத் திகதிகளில் வழங்கப்படும் கொடுப்பனவுத் திகதிகளில் காலை 7-30 மணியிலிருந்து ஓய்வூதியப் பற்றுச் சீட்டை 2-ம் குறுக்குத்தெருவிலுள்ள தபாற்கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தபால் அதிபர் அறிவித்துள்ளார். [ரா]

## உள்ளூர் ஒளிபரப்பில் சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்

நல்லை ஆதீனத்தில் கடந்த 17-ந் திகதி நடைபெற்ற சமய அறிவு வினாவிடைப் போட்டியின் தேர்வும் பரிசளிப்பு வைபவமும் உள்ளூர் தொலைக்காட்சி சேவையில் எதிர்வரும் 30-ம் திகதி வியாழன் இரவு எட்டு மணிக்கு ஒளிபரப்பப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [ரா]

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா கந்தசாமி

கந்தரோடையைச் சேர்ந்த கந்தசாமியின் அன்பு மனைவி கனகம்மா அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற நன்னித்தம்பி தம்பதிகளின் அருமைமகளும், கந்தையா, சுப்பிரமணியம், காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் சகோதரியும் சிவானந்தராசா, காலஞ்சென்ற ஜெயராசா, புவனேந்திரராசா, கணேசராசா கலாவதி, தயாவதி ரேணுகா, மாலினி ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-10-86 செவ்வாய்க்கிழமை [இன்று] மாலை 4 மணிக்கு நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்று கொள்ளவும்

[C 5452] தகவல்: வி. கந்தசாமி

### திருமதி அன்னம் அருளப்பா

திருமதி அன்னம் அருளப்பா அவர்கள் காலமாகிவிட்டார். இவர், காலஞ்சென்ற பொலிஸ் சந்தியாப்பிள்ளை, பிலிப்பாச்சி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற S A. அருளப்பாவின் அன்பு மனைவியும், சேவியர் [பிரான்ஸ்], அன்ரன், Dr பேபி கிறேஸ் வசனியா, வசந்தி பிறிற்றா ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற Dr செல்லத்துரை, இராசையா, தம்பித்துரை, தம்பிஐயா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 28-10-86 செவ்வாய்க்கிழமை பி. ப. 4 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து பரி. கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

111/3, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
A. அன்ரன்.

[C 5443]

## மரண அறிவித்தல்

### புலோலி கணபதிப்பிள்ளை சாம்பசிவம்

கணபதிப்பிள்ளை சாம்பசிவம் (இளைப்பாறிய நிர்வாகசேவை உத்தியோகத்தர்) காலமானார் அன்னார் செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், விக்கினேஸ்வரன், வரதராசன் (பொறியியலாளர் அமெரிக்கா) கோணேஸ்வரன் (பொறியியல் மாணவன், இந்தியா) மயில்வாகனம் [பொறியியல் மாணவன், இந்தியா] ஞானசம்பந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும் திரு க நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்) திரு க. தனபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திரு ம சிறிஸ்கந்தராசா, Dr. ம இராமச்சந்திரன் [வைத்தியகலாநிதி, அமெரிக்கா] திருமதி ச மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவர். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-10-86 செவ்வாய்க்கிழமை இன்று முற்பகல் 10-00 மணியளவில் புங்கடி, புலோலியில் நடைபெறும் உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: க. சதாசிவம், புலோலி

[C-5453]

### திருமதி சொர்ணம்மா குணரத்தினம்

பருத்தித்துறையைச் சேர்ந்த திருமதி சொர்ணம்மா குணரத்தினம் 27-10-86 மாலை காலமானார். இவர் திரு. R M. குணரத்தினம் [இளைப்பாறிய உப அதிபர், ஹாட்லிக் கல்லூரி] அவர்களின் அன்பு மனைவியும், திரு. K பூரணம்பிள்ளை (இளைப்பாறிய அதிபர் ஹாட்லிக் கல்லூரி, பரியோவான் கல்லூரி), Dr K. தெய்வானந்தம்பிள்ளை (Fuji), காலஞ்சென்ற ராணியம்மா சாமுவேல், திருமதி J. நல்லையா [சுண்டிக்குளி] ஆகியோரின் சகோதரியும், Dr M K குணரத்தினம் (Australia) Dr. D .J குணரத்தினம் [Trinidad], திருமதி சரோஜினி தேவி, ஜெயரத்தினம் (U K), திருமதி தேவி சண்முகசுந்தரம் (Canada) ஆகியோரின் அன்புத் தாயாரும், காமினி (Australia, குமுதினி (Trinidad), Dr. J S ஜெயரத்தினம் [U K], திரு. சண்முகசுந்தரம் Canada] ஆகியோரின் அன்பு மாமியும், மைக்கல், தரால் தஷி, பிறிவின், நிலானி ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார் அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை [28-10-86] பிற்பகல் 3 மணியளவில் ''ஞானஸ்தான்'', 20, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டிக்குளி இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக பரியோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். [C 5460]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O, Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126